# சிலுவைப் பாதை

**தொடக்கத்தில்:**

மனுக்குலத்தின் பாவங்களைப் போக்க, கடவுள் மனுவுருவெடுத்து சிலுவை மரணம் ஏற்றார். அவர் நமக்காக ஏற்ற சிலுவைப் பாதை, மனுக்குல மீட்புப் பாதையாக அமைந்தது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் பாவக் கறைகளைக் கழுவவும், தன்னைப் புடமிட்டுப் புதுப்பித்துக் கொள்ளவும், இந்தப் பாடுகளின் பாதை பயனளிக்கிறது. இதற்காகவே, இன்று நாம் கிறிஸ்துவோடு இந்தச் சிலுவைப் பயணத்தில் பங்கு கொள்ளப் போகிறோம்.

பொதுவாக நமக்குள் எழும் கேள்வி, “இறைமகன் இயேசு வாழ்ந்த தியாக வாழ்க்கையை, சாமானியரான நாம் வாழ முடியுமா?” என்பதுதான். இதற்கு இறையடியார்கள் வாழ்ந்து காட்டிய மறைசாட்சியான வாழ்க்கையே சாட்சி. அந்த வகையில், இன்றைய தியான சிந்தனைகளை நாம் மூன்று நிலைகளில் பெற இருக்கிறோம்.

முதலாவதாக, இறைமகன் இயேசுவின் வாழ்வு நமக்குக் கூறும் படிப்பினைகள். அடுத்ததாக, இறை இயேசுவைப் பின்பற்றிய இறையடியார்கள் தம் கிறிஸ்தவ வாழ்வில் சந்தித்த சவால்கள். இறுதியாக, இன்றைய கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் ஏற்க வேண்டிய மாற்றங்கள்.

இவைகளே, நம்முடைய கிறிஸ்தவ வாழ்வைத் தடம் புரளாமல் வழி நடத்தி, தன்னம்பிக்கைக்கு வலுவூட்ட இருக்கிறது. இதனால், நம் அன்றாடப் பாடுகளைத் தூக்கி எறிய அல்ல, தூக்கிச் சுமக்கும் வலிமை பெறப் போகிறோம்.

இந்த நம்பிக்கையோடு நம் சிலுவைகளைச் சிறகுகளாக மாற்றவும், சிறகுகளை விரித்து தேவன் தரிசனம் காணவும், இறை இயேசுவின் இச்சிலுவைப் பயணத்தில் பின் தொடர்வோம்.

## முதல் நிலை தீர்ப்பிடப்படுதல்

**இறைமகன் வாழ்வில்:**

பிலாத்து யூதர்களிடம், “இதோ உங்கள் அரசன்!” என்றான். அவர்கள், “ஒழிக, ஒழிக, அவனைச் சிலுவையில் அறையும்” என்று கத்தினார்கள் (யோவான் 19:14 -15 ).

**இறையடியார் வாழ்வில்:**

இத்தாலி தேசத்தில் பிறந்து சமயப்பணி ஆற்றுவதற்காக இந்தியாவிற்கு வந்த சேசுசபைக் குரு, “கான்ஸ்டன்டின் ஜோசப் பெஸ்கி.” நம் நாட்டுத் துறவிகள் போல காவியுடை அணிந்து, சைவ உணவு உண்டு வாழ்ந்தவர். தமிழகத்திற்கு வந்த பின்பு தமிழ்மொழி கற்று, அதில் புலமை பெற்று பல இலக்கிய நூல்களையும், இலக்கண நூல்களையும் இயற்றினார். தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் செய்த முதல் மொழியாசானும் இவரே. தைரியநாதசாமி, வீரமாமுனிவர் என்றெல்லாம் அழைக்கப்பட்ட இவர் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று இறைபணியாற்றி உள்ளார். இவரது மொழிப் புலமையைக் கண்டு வியக்காதவர் எவருமில்லை.

**இன்றைய வாழ்வில்:**

இத்தகு நற்பண்டிதரான வீரமாமுனிவரின் மொழிப் புலமையை, இன்றைய வீணர்கள் சிலர், “திரிபுடையது” எனத் தீர்ப்பிடுகின்றனர். இருப்பினும், முனிவர் ஆற்றிய பணி, கிறிஸ்துவைப் போல் செல்லுமிடமெல்லாம் நன்மை செய்து கொண்டே சென்ற பணி.

நன்மை - தீமைக்கு எதிரானது; அறிவு - மடமைக்கு எதிரானது; இவ்விரெண்டும் தவறாகச் செயல்படும் பணம், பதவி, அதிகாரத்திற்கு எதிரானது. எனவேதான், தீமை நன்மையைத் தீர்ப்பிட்டு இழிவுபடுத்த நினைக்கிறது. ஆனால், இயேசுவோ தீமையை ஒழிக்க சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குத் துணிந்தார். அதுபோல, தமிழை செப்பனிட்டு வளர்த்த முனிவரின் மொழிப் பணியும், புன்மொழிகளைப் புறந்தள்ளி கல்வெட்டாய் காலம் கடந்து நிமிர்ந்து நிற்கிறது.

**இறை வேண்டலில்:**

அன்பு இறைவா, இப்படித்தான் திறமை இருப்பவர்களையும், சேவை செய்பவர்களையும் ஏதாவது ஒரு குறை சொல்லி தீர்ப்பிடுகிறோம். அது அவர்களின் பணி வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக இருக்கிறது.

"நல்லது செய்த லாற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்"

என்கிறது புறநானூறு. நாங்களும், உம்மைப் போல நல்லது செய்ய அல்லது அல்லன செய்தலையாவது விட்டுவிட வரம் தாரும். ஆமென்.

## இரண்டாம் நிலை சிலுவை சுமத்துதல்

**இறைமகன் வாழ்வில்:**

"அவருக்குச் செந்நிற ஆடையை உடுத்தினர்; ஒரு முள்முடி பின்னி அவருக்குச் சூட்டி, "யூதரின் அரசே வாழ்க!" என்று அவரை வாழ்த்தத் தொடங்கினர். அவரை ஏளனம் செய்த பின் செந்நிற ஆடையைக் கழற்றிவிட்டு அவருடைய ஆடைகளை அணிவித்து அவரைச் சிலுவையில் அறைவதற்காக வெளியே கூட்டிச் சென்றனர்." (மாற்கு 15:17,20)

**இறையடியார் வாழ்வில்:**

அருட்தந்தை தமியான் வாழ்ந்த காலத்தில் தொழுநோயாளிகளை சமூகத்திலிருந்து பிரித்து மலாக்கா தீவுக்கு அனுப்பி வைப்பர். இரக்கமும் பரிவும் மிக்க தமியான் அடிகள் இத்தீவுக்கு அனுப்பப்பட்டார்.

அங்கு நோயாளிகளுக்குத் தரம் தாழ்ந்த உணவு, உடை வழங்குவதைத் தடுத்தார். பணக்கார நோயாளிகள் தவிர மற்றவர்கள் இலை தழைகளால் வேயப்பட்ட கூரைகளில் இருந்தனர். கூரையும் தரையும் எப்பொழுதும் ஈரமாகவே இருந்தன. சுற்றுப்புறம் சுகாதாரமின்றி இருந்தது. இதைக் கவனித்த தமியான் அடிகள், தானே அக்கூரைகளைச் செப்பனிட்டு, சுற்றுப்புறத்தைத் தூய்மை செய்தார். நோயாளிகளிடமிருந்தஉற்சாகக் குறைவு, மனத்தளர்ச்சி, தனிமை உணர்வு, கவலை போன்றவற்றைப் போக்க இசைக் கருவிகளை இசைக்கக் கற்றுக் கொடுத்தார். இவரது பணியால் பலர் கிறிஸ்தவ மறையில் சேர்ந்தனர். அங்கு புதிய பங்கே உதயமானது. பதினாறு ஆண்டுகள் தொழுநோயாளிகளுக்காகப் பணி செய்ததால், இறுதியில் இவருக்கும் தொழுநோய் தொற்றியது. அதை இவர் பொருட்படுத்தவில்லை. சேவையைத் தொடர்ந்தார். தொழுநோய் மருத்துவமனை ஒன்றை உருவாக்கி, அதைக் கவனிக்க அருட்சகோதரிகளை வரவழைத்தார். தன் பணியை அவர்களைத் தொடர வைத்துவிட்டுத் தொழுநோய் முற்றிய நிலையில் இறையடி சேர்ந்தார்.

**இன்றைய வாழ்வில்:**

ஓர் உண்மைக் கிறிஸ்தவனுக்கு சிலுவை சுமத்தப் படுவதில்லை. அவன் சிலுவையை சுமத்திக் கொள்கிறான். புனித மாண்ட்போர்ட் "சிலுவையின்மையே சிலுவை" என்று கூறுவார். அதாவது, துன்பமில்லாமல் இருப்பதே பெருந்துன்பம் என்கிறார். இயேசு தம் மீது சுமத்தப்பட்ட சிலுவையை ஏற்றுக் கொண்டது போல, மலாக்காத் தீவுக்கு அனுப்பப்பட்டதை அருட்தந்தை தமியான் அடிகள் சுகமாக ஏற்றுக்

கொண்டார். நாம் நம்முடைய வாழ்க்கையில் பிறருக்காக சிலுவையை சுமக்கிறோமா? சுயநலத்திற்காகப் பிறர்மீது சிலுவையை சுமத்துகிறோமா? என்று தியானிப்போம்.

**இறை வேண்டலில்:**

அன்பு இறைவா, “அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றாக் கடை” என்ற குறளுக்கேற்ப பிறருடைய துன்பத்தைத் தனக்கு ஏற்பட்டதாகக் கருதி பணி செய்தார் தமியான் அடிகள். கிறிஸ்து உலக மக்களுக்காக சிலுவையை ஏற்றுக் கொண்ட அதே தன்மையைத் தான் உம் அடியாரிடம் பார்க்கிறோம். இந்தப் பண்பு எங்கள் வாழ்விலும் பணியிலும் வெளிப்பட அருள்தரும். ஆமென்.

## மூன்றாம் நிலை முதல் விழுதல்

**இறைமகன் வாழ்வில்:**

மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார். நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார். நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார். நமக்கு நிறை வாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார். அவருடைய காயங்களால் நாம் குணமடைகின்றோம். (எசாயா 53:4 -5)

**இறையடியார் வாழ்வில்:**

அரச பரம்பரையைச் சேர்ந்த தாமஸ் அக்வினாஸ், சொத்து சுகம் துறந்து எளிய வாழ்வு நடத்தும் துறவற சபையில் சேர்ந்தார். அவர் குடும்பத்தினரோ, அவரை ஒருவழியாக மீட்டு வீட்டிற்கு அழைத்து வந்தனர். அங்கு அவரது தனி அறையில் ஒரு பெண்ணை அனுப்பி அவரது துறவற வாழ்வுக்கும், புனித குறிக்கோளுக்கும் முட்டுக்கட்டை போட முயன்றனர். ஆனால், அக்வினாஸோ தன் ஆன்மீக வாழ்வுக்குத் தடையாக வந்த அந்தப் பெண்ணை கொள்ளிக் கட்டை கொண்டு விரட்டினார். இவர்தான் பிற்காலத்தில் “சம்மனசுகளின் சாஸ்திரி” என்று போற்றப்பட்டார்.

**இன்றைய வாழ்வில்:**

தந்தை அக்வினாஸ் போன்ற மனஉறுதி நம்மிடம் இல்லாததால் தான் இவ்வுலகில் ஐம்புல இன்பத்திற்கு ஆட்பட்டு பாவத்தில் வீழ்கிறோம். கிறிஸ்துவை விழ வைக்கிறோம்.

**இறை வேண்டலில்:**

இறைவா, “தூய உள்ளத்தோர் பேறு பெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்” என்ற வாக்குக்கேற்ப வாழ்ந்த உம் அடியார் தாமஸ் அக்வினாஸ் போலவே நாங்களும் மனஉறுதி கொண்டு வாழ அருள்தரும். ஆமென்.

## நான்காம் நிலை தாய் சந்தித்தல்

**இறைமகன் வாழ்வில்:**

மரியாள் இயேசுவிடம், “மகனே ஏன் இப்படிச் செய்தாய்?, இதோ பார் உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டு இருந்தோமே” என்றார். அதற்கு இயேசு, “நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரியாதா?” என்றார். (லூக்கா 2:48 - 49)

**இறையடியார் வாழ்வில்:**

கி.பி. 303 -ல் கிறிஸ்தவர்களைக் கொன்று விடுமாறு உரோமை அரசன் ஆணை பிறப்பித்தான். இச்சூழலில் தந்தையை இழந்து தாய்மாமாவால் வளர்க்கப்பட்டு மாபெரும் குத்துச்சண்டை வீரரான பங்கிராஜ், அந்நாட்டு மன்னனுக்கு முதன்மை வீரனாகத் திகழ்ந்தான். அவனை வளர்த்த மாமா, இறக்கும் தறுவாயில் பங்கிராசிடம், "பங்கிராஜ், முதலில் நீ கிறிஸ்துவுக்கு வீரன், பிறகுதான் நம் நாட்டு மன்னனுக்குப் போர்வீரன்" என்று உறுதி பெற்றார்.

மன்னன் கிறிஸ்தவர்களை அதிகமாகச் சித்திரவதை செய்தான். சிலரை சிங்கத்திற்கு இரையாகப் போட்டான். இத்தகு மரண அவதியிலுள்ள கிறிஸ்தவர்களைப் பங்கிராஜ் இரகசியமாகக் காப்பாற்றி, மருந்திட்டுப் பிழைக்கச் செய்தான். கூடவே, அவர்களுக்குத் திருமறையும் போதித்தான். பங்கிராஜின் இந்த அரசவிரோதச் செயலை மன்னன் கண்டித்தான். அதோடு அவனையும் கிறிஸ்துவை மறுதலிக்குமாறு கூறினான். அதை ஏற்க மறுத்தான் பங்கிராஜ். இதனால் சினங்கொண்ட மன்னன், "இவனை மலைமீது இழுத்துச் சென்று இவன் தலையைத் துண்டியுங்கள்" என ஆணையிட்டான். மரணத்திற்கு முன் மலையுச்சியில் பங்கிராஜை அவன் தாய் சந்திக்கிறாள்.

மரண வாயிலில் மகனை ஆரத்தழுவி முத்தமிட்டு, "மகனே, இறுதிவரை விசுவாசத்தில் நிலைத்திரு, நமது நிலையான இல்லம் விண்ணகம், அங்கு சந்திப்போம்" என்று தாய் கண்ணீர் மல்கக் கூறினாள்.

முதல் நாள் போரில் கணவனை இழந்து, இரண்டாம் நாள் போரில் தமையனை இழந்து, அடுத்த நாள் போருக்குத் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த தன் சிறுமகனை அழைத்து அவன் கையில் வேல் கொடுத்து போருக்கு அனுப்பிய சங்ககால வீரத்தாயை நாம் புறநானூற்றில் படித்திருக்கிறோம். அதுபோல, கிறிஸ்தவர்களுக்காக உயிரைத் துச்சமென மதிக்கும் மறக்குலத்தாய், பங்கிராஜை சாவின் நுனியில் வாழ்த்துகிறாள்.

**இன்றைய வாழ்வில்**:

சிறுவயதில் இயேசு, "என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருப்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கூறியதை மரியாள் அறிந்திருந்தாள். இப்போதும் இயேசுவின் எண்ணம் என்னவென்று அவள் அறிவாள். அதிர்ச்சி ஒரு புறம் இருப்பினும், அவர் ஏற்ற பாதை மனுக்குல மீட்புப்பாதை என்பதை உணர்வாள். இந்த உணர்வுதான் பங்கிராஜின் தாயிற்கு முன்நிகழ்வாய் அமைந்தது. இந்த இருவரும் நம்முடைய வாழ்க்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறார்கள்? தியானிப்போம்.

**இறை வேண்டலில்:**

"கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்க்காதீர்" என்ற இறைவா, கிறிஸ்தவ வாழ்வில் அடி எடுத்து வைத்தபின், பல வேளைகளில் சுயம் என்ற தன்மை எங்களைத் திரும்பிப் பார்க்கச் செய்துள்ளது. மரியாளைப் போல, பங்கிராஜின் தாயைப்போல நாங்களும் வாழ வரம் தாரும். ஆமென்.

## ஐந்தாம் நிலை சீமோன் உதவுதல்

**இறைமகன் வாழ்வில்:**

"அப்பொழுது சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவர் வயல் வெளியிலிருந்து வந்து கொண்டிருந்தார். படைவீரர்கள் இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி அவரைக் கட்டாயப்படுத்தினார்கள்." (மாற்கு 15.21)

**இறையடியார் வாழ்வில்:**

பிரான்ஸ் நாட்டில் ஒரு சிறிய கிராமத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் வின்சென்ட் தே பால். இளமையிலேயே பிணி, வறுமை, எளிய வாழ்வு ஆகியவற்றை அறிந்திருந்தார். தன் இருபதாம் வயதில் குருவானார். ஒரு முறை கடல் வழிப் பயணம் செய்யும்போது கடற்கொள்ளையர்களால் தாக்கப்பட்டு கைதியானார். கைதியான அவரை அடிமையாக ஒரு மீனவருக்கு விற்றனர். பின்னர் அவரை ஒரு சாராய வியாபாரி விலைக்கு வாங்கினார். அவரது இரண்டாவது எஜமான் இறந்த போது மீண்டும் சந்தைக்குக் கொண்டு வந்து, அவரை இன்னொரு வியாபாரிக்கு விற்றனர். விசுவாசத்தை இழந்த கத்தோலிக்கராக இருந்த அந்த வியாபாரி, தான் விலைக்கு வாங்கி வந்த அடிமை, ஒரு கத்தோலிக்கக் குரு என அறிந்த போது அவரை அன்புடன் தழுவிக் கொண்டார். தந்தை வின்சென்டின் செப தப வாழ்வால் மனந்திரும்பி, அந்த வியாபாரி மீண்டும் கத்தோலிக்க விசுவாசத்திற்குத் திரும்பினார். அதோடு தந்தை வின்சென்டிற்கு விடுதலை அளித்தும் மகிழ்ந்தார்.

**இன்றைய வாழ்வில்:**

சீமோன் படைவீரர்களின் கட்டாயத்திற்காகப் பணிந்து உதவினார். ஆனால், அருட்தந்தை வின்சென்டை அடிமையாக விலைக்கு வாங்கிய வியாபாரியோ, அவரைத் தன் ஞான குருவாக ஏற்று அவருக்கு விடுதலையும் அளித்தார். இதையே இறைவன் விரும்புகிறார். ஓர் உண்மைக் கிறிஸ்தவர் தன் பணியாளருக்கும் பணி செய்வார். நம்முடைய பணி எத்தகையது? என்று இறைவனுக்கு முன் நினைவு கூர்வோம்.

**இறை வேண்டலில்:**

“உங்களுக்குள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும்” (மத்.20:26) என்ற இறைவா, எங்கள் வாழ்வும், பணியும் எப்போதுமே எங்களின் நிலையிலிருந்து தாழ்ந்தவர்களுக்கு உதவியாக அமையட்டும், அதற்கான அருளைத் தரும். ஆமென்.

## ஆறாம் நிலை முகத்தைத் துடைத்தல்

**இறைமகன் வாழ்வில்:**

இயேசு வானத்தை அண்ணாந்து பார்த்து வேண்டியது, “தந்தையே உலகம் தோன்றும் முன்பே நீர் என்னை மாட்சிப் படுத்தியுள்ளீர். இப்போது உம் திருமுன் அதே மாட்சியை எனக்குத் தந்தருளும். நீர் இவ்வுலகிலிருந்து தேர்ந்தெடுத்து என்னை ஒப்படைத்த மக்களுக்கு நான் உமது பெயரை வெளிபடுத்தினேன்”. (யோவான் 17:1,5,6)

**இறையடியார் வாழ்வில்:**

குழந்தையாய் இருக்கும் போதே தன் தந்தையை இழந்த அருளானந்தர், போர்ச்சுக்கல்லில் அரசவை வாழ்வில் விருப்பமின்றி தாயிடம் வளர்ந்தார், தீராத நோய் இவருக்கு வரவே, அவரது தாய் சேசு சபையினரின் அங்கியை இவருக்கு அணிவித்து செபித்தாள். சில நாட்களில் நோய் நீங்கியது. இந்த மகிமையால் அருளானந்தர் சேசுசபையில் சேர்ந்தார்.

கல்வித் திறமை கொண்ட இவர், “இந்தியாவில் மறை போதிப்பதே என் பணி” என்று விரும்பி வந்தார். தஞ்சை தட்டுவாஞ்சேரியில் பங்குக் குருவானார். இவர்மேல் பொறாமை கொண்டவர்களின் தூண்டுதலால், மன்னர் இவரை கைது செய்ய முற்பட்ட போது, கொள்ளிடம் ஆற்றை நீந்தியே கடந்தார். பல கிலோ மீட்டர் தூரம் காடுகளில் நடந்தே தப்பிச் சென்றார். மறவ நாட்டில் பணி செய்த போது அங்கிருந்தவர்களால் கைது செய்யப்பட்டார். கடும் வெயிலில் அவரைப் பாறையில் கிடத்தி சேவகர்கள் அவர்மேல் ஏறி மிதித்து கொடுமைப்படுத்தினர். இவரது புனித வாழ்வாலும், அற்புதங்களாலும் மனம்

மாறியோர் ஏராளம். இறுதியில், இவரை சித்திரவதை செய்யப்பட்ட கைதியாக ஓரியூர் கவர்னரிடம் அழைத்துச் சென்றனர். மரணத்தை எதிர் நோக்கிச் செல்லும் அப்பாதையில், ஒருபெண் அவர்மேல் இரக்கப்பட்டு ஒரு டம்ளர் பால் கொடுத்தாள். அதைக் குடித்துவிட்டு, "அம்மா இந்த ஊரின் பெயரென்ன?" என்று கேட்டார். அந்தப் பெண் "இது புல்லூர்" என்றாள்.

அருளானந்தரோ, "இந்தப் புல்லூர், நெல்லூர் ஆகட்டும்" என்று ஆசிர்வதித்தார். அன்று முதல் அவ்வூர் நெல்விளைவதில் பஞ்சமற்றுப் பசுமையானதாக அவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

**இன்றைய வாழ்வில்:**

கொலைபாதகப் படைவீரர்களைக் கடந்து இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள் - வெரோணிக்காள். அதே போல அருளானந்தரைப் பாதக வீரர்கள் இழுத்துச் சென்ற போது, அவர் மேல் கருணை கொண்டு ஒரு டம்ளர் பால் கொடுத்த பெண்ணையும் அறிகிறோம்.

துயருற்றவர்களின் துயரைத் துடைப்பதில் அக்கம் பக்கம் என்ன நினைப்பார்களோ? அதனால் தனக்கு ஏதும் பாதிப்பு வருமோ? என்று துளியும் நினையாது துணிந்து சென்றவர்கள் இவ்விரு பெண்களும். வள்ளுவர், "கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்" என்பார். தன்முன் நிகழும் இன்பதுன்ப நிகழ்வுகளைக் கண்டு அதற்கேற்ப நடக்க வேண்டும். இல்லையெனில், நம் கண்கள் வெறும் புண்கள் என்பதே வள்ளுவவாக்கு. இங்கு கண்ணோட்டம் கொண்ட வெரோணிக்காளையும், அவர் பண்பில் தோன்றிய புல்லூர்ப் பெண்ணையும் பார்க்கிறோம். இதுவே நாம் பெற வேண்டிய கிறிஸ்தவ வாழ்வு. இதனாலேயே இயேசு தன் முகப்பதிவை வெரோணிக்காவிற்குத் தந்தார். அருளானந்தர் புல்லூரை நெல்லூராக மாற்றினார்.

**இறை வேண்டலில்:**

இறைவா, நாங்களும் துயருற்றோருக்குத் தோள் கொடுக்க, "உடுக்கை இழுந்தவன் கை போல" விரைந்து சென்று உதவ, இப்பெண்மணிகளுக்குள்ள துணிவை எமக்குத் தாரும். ஆமென்.

## ஏழாம் நிலை   இரண்டாம் விழுதல்

**இறைமகன் வாழ்வில்:**

"அவர் என்னைத் துரத்தி அடித்து, ஒளியினுள் அன்று இருளினுள் நடக்கச் செய்தார்! அவர் என் சதையையும் தோலையும் சிதைத்து விட்டார்... செதுக்கிய கற்களால் என் வழிகளில் தடைச்சுவர் எழுப்பினார். என் பாதைகளைக் கோணலாக்கினார்!." (புலம்பல் ஆகமம் 3:2,4,9)

**இறையடியார் வாழ்வில்:**

பிரான்ஸ் நாட்டில் ஓர் உயர்குடியில் பிறந்தவர் செபஸ்தியார். உரோமைப் பேரரசில் சிறந்த படைவீரர். அவர் வாழ்ந்த காலம் வேத கலாபனை காலம். கிறிஸ்தவர்களுக்கு எதிராக அரசு செயல்பட்டது. "தன் மெய்க்காப்பாளர் - செபஸ்தியார் ஒரு கிறிஸ்தவர்" என்பதைக் கேள்வியுற்ற மன்னன் வெகுண்டெழுந்தான். "என் உப்பைத்தின்று, எனக்குப் பிடிக்காத கிறிஸ்தவ மறையில் வாழ்வதா?" எனக் கோபமுற்ற மன்னன், செபஸ்தியாரைக் கம்பத்தில் கட்டி அம்புகளால் துளைக்கும்படி ஆணையிட்டான். வீரர்களும் அவ்வாறே செய்தனர். அவருடலை அடக்கம் செய்ய வந்த பெண், அவருக்கு உயிர் இருப்பதை அறிந்து இரகசியமாய் வீட்டிற்கு அழைத்து சென்று குணப்படுத்தினாள். அதன் பின்னும், செபஸ்தியார் கிறிஸ்தவர்களின் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடி வந்தார். பின்பொருநாள் மன்னனை எதிர்கொண்டார் செபஸ்தியார். இவர் உயிரோடிருப்பது கண்டு அதிசயித்து "நீர் செபஸ்தியாரா?" என்று வினவ, "நீர் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துகிறீர் என உலகம் அறியும் பொருட்டு, இயேசு என்னை உயிரோடு காப்பாற்றினார்" என்றார். மன்னன் மிகுந்த சினமுற்று, "இவரைத் தடியாலடித்துக் கொல்லுங்கள்" என உத்தரவிட்டான்.

**இன்றைய வாழ்வில்:**

இயேசு இரண்டாம் முறை கீழே விழுந்ததற்கு நம்முடைய கோபம் என்னும் பண்பே காரணம். கிறிஸ்தவர் என்றதனால் கோபமுற்று செபஸ்தியாரைக் கொன்றான் மன்னன். இதனால் அவனொரு நல்ல மெய்காப்பளாரை இழந்தான். நாமும் பல நேரங்களில் கோபமுற்று கிறிஸ்தவம் என்ற பண்பை இழக்கிறோம். சினம் தன்னை மட்டுமில்ல, சேர்ந்தவர்களையும் கொல்லும் என்பதை "சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி" என்று வள்ளுவம் குறிப்பிடுகிறது. செபஸ்தியாரைக் காப்பாற்றிய பெண்ணின் செயல் - கிறிஸ்தவ செயல்; மன்னனின் செயல் - சாமானியனின் செயல்.

**இறை வேண்டலில்:**

இறைவா, சினம் என்னும் கொடும் பண்பு எங்களிடமிருந்து அவ்வப்போது உம்மை வீழத்துவதாய் இருக்கிறது. அதை அடியோடு அகற்றி, செபஸ்தியாருக்கு உதவிய இரக்கமுடைய பெண்ணைப் போல நாங்களும் மாற வரமருளும். ஆமென்.

## எட்டாம் நிலை மகளிருக்கு ஆறுதல்

**இறைமகன் வாழ்வில்:**

பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, "எருசலேம் மகளிரே நீங்கள் எனக்காக அழவேண்டாம். மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்" என்றார். (லூக்.23:27,28)

**இறையடியார் வாழ்வில்:**

இத்தாலியில் காசியா என்னுமிடத்தில் பிறந்தவர் ரீத்தா. பத்தொன்பது வயதில் திருமணமான இவருக்கு இரு ஆண் குழந்தைகள் பிறந்தன. இவரது கணவன் வேண்டாதவர்களால் கொல்லப்பட்டான். இவரது காலத்தில் இவர் வாழ்ந்த காசிய பகுதியில் பழிக்குப்பழி வாங்கும் நிலை மக்களிடம் அதிகமாக இருந்தது. கணவன் வீட்டார் கணவருக்காகப் பழிக்குப்பழி முயற்சியில் ஈடுபட்டால், தன்பிள்ளைகளை விரோதிகள் கொன்று விடுவார்களே என்று பயந்து வாழ்ந்து வந்தாள். அப்போது, எதிர்பாரா நோய்க் கொடுமையினால் பிள்ளைகள் இருவரையும் பரிதாபமாக இழந்தாள் ரீத்தா. கணவனையும், குழந்தைகளையும் இழந்தபின் தனக்கென எந்தப் பொறுப்பும் இல்லா நிலையில் அவள் துறவற மடம் சென்று புனித வாழ்வில் ஈடுபட விரும்பினாள். துறவற சபைத்தலைவி, "உன் கணவனைக் கொன்றவருடன் நீ ஒப்புரவு செய்யாமல் சபையில் சேர்க்க முடியாது" எனத் திட்டவட்டமாக மறுத்தார். ஏனெனில், பிற்காலத்தில் அவர்களால் துறவற மடத்துக்கு ஏதும் தொல்லை வரலாம் என்ற எண்ணமே அதற்குக் காரணம்.

ரீத்தா தானாகவே கணவனைக் கொன்றோரை நாடிச்சென்று, பொதுவிடத்தில் பொதுமக்கள் முன்னிலையில் ஒப்புரவு செய்து கொண்டாள். அதன் பின் ஒப்புரவு எங்கு நடந்தாலும் அங்கு ரீத்தா இருப்பது அவசியம் என அனைவரும் விரும்பினர். இத்தகு ரீத்தாவை உயிரோடிருக்கும்போதே, மக்கள் அவளைப் "புனிதை" என அழைக்கத் தொடங்கினர்.

**இன்றைய வாழ்வில்:**

இயேசு மகளிரை அவர்களுக்காகவும், அவர்களது மக்களுக்காகவும்அழச் சொன்னார். ஏனெனில், பல குடும்பங்களில் ஒப்புரவு இல்லாததால் விரோத எண்ணங்கள் வளர்க்கப்பட்டு, வாழ்க்கை முழுவதையும் அன்பும் அமைதியுமின்றி வீணடித்து விடுகின்றனர். இது அவருக்கு நன்றாகவே தெரியும். எனவேதான், இல்லத்தை உருவாக்கும் தாய்மார்கள் ஒப்புரவில் சிறந்தால், அவர்கள் பிள்ளைகளும் அவ்வழியில் சிறந்து விளங்குவர். இதனால், நாளைய உலகமே ஒப்புரவில் உயரும். இவ்வாறு உயரும்போது, நாடுகளுக்குக்கிடையே போர் என்ற பிணக்கே இருக்காது என்று எண்ணினார். இவ்வெண்ணம் "யாதும்

ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுச் சிந்தனையை மீண்டும் இம்மண்ணில் மலரச் செய்யும். எனவேதான் இயேசு, "உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்" என்று கூறினார்.

எங்கு சமாதானம் இருக்கிறதோ அங்கு அமைதியும் மகிழ்ச்சியும் இருக்கும். "பகைவரை அன்பு செய்வதே உண்மையான வீரம்" என்பார் நபிகள் நாயகம். புனித ரீத்தா அதைச் செய்தார். வீரமான கிறிஸ்தவப் பெண்ணானார்.

**இறை வேண்டலில்:**

அன்பு இறைவா, நாங்கள் எங்களுக்காகவும், எங்கள் மக்களுக்காகவும் அழுகிறோம். புனித ரீத்தா போல ஒப்புரவில் நாங்களும் சிறந்து விளங்கவும், இதுவே உண்மையான வீரம் என்பதை உணர்ந்து கொள்ளவும் ஆசி வழங்கும். ஆமென்.

## ஒன்பதாம் நிலை மூன்றாம் விழுதல்

**இறைமகன் வாழ்வில்:**

இயேசு, "எனது உள்ளம் சாவுவருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது; நீங்கள் இங்கேயே தங்கி விழித்திருங்கள்" என்று அவர்களிடம் கூறினார்.சற்று அப்பால் சென்று தரையில் விழுந்து, முடியுமானால் அந்த நேரம் தம்மைவிட்டு விலகுமாறு இறைவனிடம் வேண்டினார். (மாற்கு 14:34,35)

**இறையடியார் வாழ்வில்:**

பெல்ஜிய நாட்டில் பிறந்தவர் பெர்க்மான்ஸ். சிறு வயதிலேயே நற்கருணை பக்தி, மாதா பக்தி இவருக்கு உண்டு. நண்பர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் போது, இவரோ செபப் பணி, பீட உதவிப்பணி போன்றவற்றில் ஈடுபட்டிருப்பார். தன் பதினேழாம் வயதில், தந்தைக்கு விருப்பமில்லாத போதிலும் சேசுசபையில் சேர்ந்தார். சிறிது நாளில் அவர் தாயின் உடல்நிலை மோசமாகி இறந்து விட்டார். செய்வதறியாத அவரது தந்தை, மகனுக்குக் கடிதம் எழுதினார். அதில்,"மகனே, குடும்பத்தில் ஆளில்லை, நீ வீட்டிற்குத் திரும்பி வந்துவிடு" என்று அழைத்திருந்தார்.

அதற்கு அவரோ, "பணத்துக்காகப் பாடுபட்டு அதைச் சேர்த்து வைப்பதில் பயனில்லை. நிறைந்த பயன் வேண்டுமெனில் கிறிஸ்துவுக்குச் சேவை செய்யுங்கள் அப்பா" என்று பதில் கடிதம் எழுதினார்.

இவர் போலவே, வடக்கு இத்தாலியில் ஓர் அரச பரம்பரையில் தோன்றியவர் ஞானப்பிரகாசியார். தனக்கு எவ்வித சொத்தும் தேவையில்லை என்று உதறிவிட்டார். மக்கள் இவரை, "இளவரசே" என்று அழைப்பதையும் தடுத்து நிறுத்தினார். துறவறம் செல்ல சேசுசபையில் சேர்ந்தார். இவரது தந்தை, மகன் துறவறம் செல்வதைத் தடுத்தார். மகனோ, "அப்பா உங்களுக்குப் பணியக் கட்டமைப்பவன் நான். கடவுள் என்னை சபைக்கு அழைக்கிறார். அதை நீங்கள் தடுத்தால் அவரையே எதிர்ப்பதற்கு ஒப்பாகுமல்லவா?" என்று கடிதம் எழுதினார்.

தந்தை இறந்தபின், ஞானப்பிரகாசியார் தன் தாய்க்கு ஆறுதலாக ஒரு கடிதம் எழுதினார். அதில், "அம்மா என்னுடைய பயிற்சிக் காலத்தில், மருத்துவமனை சென்று நோயாளிகளைக் கழுவும் பணியைச் செய்தேன்.அப்போது மாதா மடியில் வளர்த்தப்பட்ட இயேசுவையே நான் கழுவித் துடைக்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

**இன்றைய வாழ்வில்:**

இயேசுவின் முதல் வீழ்ச்சி, நம்முடைய "ஐம்புல" நாட்டத்தால் வந்தது. இயேசுவின் இரண்டாவது வீழ்ச்சி, நம்முடைய "சினம்" என்னும் கோபத்தால் நிகழ்ந்தது. அவரின் மூன்றாவது வீழ்ச்சியோ, நம்முடைய "மயக்கம்" என்னும் ஆசையால் விளைந்தது.

இவ்வுலகில் பொருட்களின் மீதும், சொத்துக்களின் மீதும் "மயக்கம்" கொண்டு நம் ஆசையின் எல்லை விரிந்து கொண்டே செல்கிறது. "ஆசையே அழிவிற்குக் காரணம்" என்பார் புத்தர். "ஆசையை வரையறுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், அளவற்ற ஆசை ஆபத்தானது" என்பார் வேதாத்திரி மகரிஷி. "நிறைந்த பயன் வேண்டுமெனில் கிறிஸ்துவுக்குச் சேவை செய்யுங்கள்" என்று சொத்துக்களைக் காக்க ஆசைப்பட்ட தன் தந்தைக்கே நல்லுரை கூறிய தந்தை பெர்க்மான்சும், சொத்துக்களை உதறிவிட்டுத் துறவியாகி, "நோயாளிகளைக் கழுவும் போதெல்லாம் கிறிஸ்துவையே கழுவுகிறேன்" என்று கூறிய ஞானப்பிரகாசியாரும் இவ்வுலக ஆசை என்னும் மயக்க நிலையைக் கடந்தவர்கள். அதனால்தான் அவர்கள் கிறிஸ்துவுக்குப் பணி செய்ய முடிந்தது.

**இறை வேண்டலில்:**

"காமம், வெகுளி, மயக்கம் இம்மூன்றன் நாமம் கெடக் கெடும் நோய்" என்கிறது வள்ளுவம். இம்மூன்றின் அடிப்படையில் தான், இறைவா, உம்மை நாங்கள் விழ வைக்கிறோம். இதை நீர் குறியீடாக எமக்கு உணர்த்தினீர். இம்முக்குணங்களைக் களைந்து முழுமையான கிறிஸ்துவ வாழ்வு வாழ, மூவொரு இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## பத்தாம் நிலை ஆடை களைதல்

**இறைமகன் வாழ்வில்:**

"இயேசுவை சிலுவையில் அறைந்த பின்பு குலுக்கல் முறையில் அவருடைய ஆடைகளைப் பங்கிட்டுக் கொண்டார்கள்." (மத்தேயு 27:35)

**இறையடியார் வாழ்வில்:**

இத்தாலி தேசத்தில் உள்ள அசிசி நகரில் பிறந்தவர் பிரான்சிஸ். மிகப் பெரிய செல்வந்தர் வீட்டில் பிறந்து, நண்பர்களுடன் ஆடம்பரமாக வாழ்ந்து வந்தார். இவர் இளமைப்பருவத்தில் ஏழைகளுக்கு உதவுவதையே முதன்மையாகக் கொண்டார். தான் சேர்த்து வைத்த சொத்துக்களை எல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்தே கரைத்து விடுவார் என்று அவரது தந்தை பயந்தார். இறுதியில், "பிரான்சிசுக்கு எதுவும் கொடுக்கக்கூடாது" என அவரது தந்தை உத்தரவிட்டார்.

பிரான்சிசோ, "ஆண்டவரே! என்னுடைய எல்லாவற்றையும், ஏன்? இந்த உடைகளையும் கூட அவருடையது என்பார். இதையும் கழற்றி நான் அவரிடம் கொடுத்து விடுகிறேன்" என்று உடைகளை வீசி எறிந்து விட்டு வெற்றுடலாக நின்றார். அங்கிருந்தவர்கள் விரைந்து போய், அவருக்கு ஒரு துணியைக் கொடுத்து மூடிக்கொள்ளச் செய்தனர்.

வேறொரு சமயம், உரோமையில் உள்ள புனித இராயப்பர் சதுக்கத்தில் பிச்சைக்காக நின்றிருந்த கூட்டத்தைக் கண்டார். தன் உடைகளை ஒரு பிச்சைக்காரனுக்குக் கொடுத்துவிட்டுத் தானும் அக்கூட்டத்துடன் சேர்ந்து பிச்சை கேட்க ஆரம்பித்தார். இந்த பிரான்சிஸ்தான் பிற்காலத்தில் "அசிசியார்" என்றழைக்கப்பட்டார்.

**இன்றைய வாழ்வில்:**

உலக மக்களின் மீட்புக்காக, தன் ஆடைகளை இழந்து நிர்வாணமாகி, தன்னுடைய மிகையான அன்பை வெளிப்படுத்தினார் கிறிஸ்து. அதே மனநிலையில்தான் புனித அசிசியாரும் தன் ஆடைகளைத் துறக்கத் தயங்கவில்லை. எளியோருக்காகப் பிச்சை எடுக்கவும் நாணப்படவில்லை.

இதனின்று, எந்தவொரு மனிதனும் சொத்துக்களைப் பெருக்கிக் கொண்டு கிறிஸ்துவுக்கு ஊழியன் ஆக முடியாது; ஏழைகளுக்காக எவனொருவன் தன் சொத்துக்களை எல்லாம் இழக்கிறானோ அவனே கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்பவனாகிறான் என்று அறிகிறோம். ஏனெனில், "ஏழைக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்கு கடன் கொடுக்கிறார்" (நீதி.19:17) என்று நீதிமொழி கூறுகிறது.

**இறைவேண்டலில்:**

அன்பு இயேசுவே, "நடமாடும் மனிதருக்குச் செய்யும் உதவியே, கோவிலில் குடிகொண்டிருக்கும் பெருமானுக்குச் செய்யும் உதவி" என்பார் திருமூலர். இதையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, "ஏழைகளுக்குச் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்றுரைத்தீர்! "நிலை வாழ்வை உரிமையாக்க என்ன செய்ய வேண்டும்?" என வினவிய செல்வந்தரிடம், "உமக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்" (லூக்.18:22) என்றும் கூறினீர். நாங்களோ, இவ்வுலக செல்வங்களைப் பற்றிக் கொண்டு உமக்கு ஊழியம் செய்வதாய் நினைக்கின்றோம். இந்த மாயையைக் களைந்து, நாங்கள் நிலைவாழ்வு பெற, உம்மைப் போலவும், புனித அசிசியார் போலவும் பற்றற்ற மனம் பெற, அருள் தாரும். ஆமென்.

## பதினொன்றாம் நிலை சிலுவையில் அறைதல்

**இறைமகன் வாழ்வில்:**

"மண்டை ஓடு" எனப்படும் இடத்திற்கு வந்ததும் அங்கே அவரையும், வலப்புறம் ஒருவனும் இடப்புறம் ஒருவனுமாக இரு குற்றவாளிகளையும் அவர்கள் சிலுவையில் அறைந்தார்கள். (லூக் 23:33)

**இறையடியார் வாழ்வில்:**

இத்தாலி தேசத்தில் ஓர் எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவள்தான் மரியகொரற்றி. "சாவான பாவத்தைக் கட்டிக் கொள்வதைவிட சாவதே மேல்" என்ற உறுதியைப் புதுநன்மை பெறும்போதே இயேசுவிடம் சொல்லிக் கொண்டவள்.

அலெக்ஸாண்டர் என்ற ஓர் இளைஞன் கீழ்த்தரமான புத்தகங்களை வாசித்து மிருக உணர்ச்சிக்கு அடிமையானவன். ஒரு நாள் மரியகொரற்றி வீட்டில் தனியாக இருந்தபோது, அவனின் மிருக குணம் வெளிப்படத் தோன்றினான். மரியகொரற்றி, "நீ பாவம் செய்யத் துணிந்தால் நரகத்திற்குச் செல்வாய்" எனச் சினந்துரைத்தாள். கடிந்து கொண்ட கற்பின் லீலியை, வெகுண்டெழுந்த மிருகமான அலெக்ஸாண்டர், தான் கொண்டு வந்த கொலைக் கருவியால் குற்றுயிராக்கி விட்டுச் சென்றான். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மரியகொரற்றியை, அண்டை வீட்டார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். குணப்படுத்த முடியாது என்பது மருத்துவர்களால் உறுதியாயிற்று. உயிர்பிரியும் நிலையில் மரியகொரற்றி அங்கிருந்தவர்களிடம், "நான் அலெக்ஸாண்டரை முழுவதும் மன்னித்து விட்டேன். அவன் மோட்சம் வந்து சேர நான் இறைவனை வேண்டிக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினாள்.

**இன்றைய வாழ்வில்:**

இயேசு சிலுவையில் அறையப்பட்ட நிலையில், "தந்தையே இவர்களை மன்னியும்" என்றார். அதுபோல புனித மரியகொரற்றி, உயிரைப் பறித்தவனை மன்னித்தது மட்டுமின்றி, அவனின் மீட்புக்காகவும்

இறைவனை வேண்டினாள். சொல்லாலும், செயலாலும் நமக்குத் தீங்கு செய்தோருக்கு நாம் என்ன கைமாறு செய்தோம் என்பதை இங்கு நினைத்துப் பார்ப்போம்.

**இறை வேண்டலில்:**

இறையடியார் வேடத்தில் வந்து வஞ்சகம் புரிந்த பகை மன்னனை, “தயவுசெய்து யாரும் தண்டித்து விடாதீர்கள். பாதுகாப்பாக அவரை அழைத்துச் சென்று ஊருக்குப் புறம்பே விட்டுவிடுங்கள்” என்று வேண்டிக்கொண்ட பெருமைக்குரியது தமிழ் மண்.

“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்”

என்ற குறள், “துன்பம் செய்தவரைத் தண்டித்தல் அவர் நாணும்படி நன்மை செய்வதுதான்” என்று உரைக்கிறது. “மன்னியுங்கள் மன்னிக்கப்படுவீர்கள்” என்ற தேவன், தன் வார்த்தையை வாழ்வாக்கினார். அவரை ஏற்றுக்கொண்ட மரியகொரற்றியும் அதையே செய்தார். இறைவா, எங்கள் குடும்பங்களிலும் அமைதி நிலவ, ஒருவரை ஒருவர் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் மனநிலையைத் தாரும். ஆமென்.

## பன்னிரெண்டாம் நிலை உயிர் நீத்தல்

**இறைமகன் வாழ்வில்:**

நாடெங்கும் இருள் உண்டாயிற்று. திருக்கோவிலின் திரை நடுவில் கிழிந்தது. “தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்” என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார். (லூக் 23:44 - 46)

**இறையடியார் வாழ்வில்:**

பழந்தமிழ் நாட்டில் சேரநாட்டுப் பகுதியில் பிராமணப் பிரிவில் பிறந்தவர் நீலகண்டப் பிள்ளை. கல்வி மற்றும் கலை பலவும் கற்றுத் தேர்ந்தவர். மன்னன் மார்த்தாண்டவர்மாவிடம் முக்கியப் பொறுப்பு வகித்தார். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட நீலகண்ட பிள்ளை, “தேவசகாயம் பிள்ளை” எனப் பெயர் கொண்டார். அவர்தம் மனைவியையும் கிறிஸ்துவை அறியச் செய்தார். இதனால் சினமுற்றோர் அவருக்கு விளைவித்த கொடுமைகள் சொல்ல வொண்ணாதவை.

விஷம் கலந்த பானத்தைத் தேவசகாயம் பிள்ளைக்குத் தந்தனர். அதில் சிலுவை அடையாளம் வரைந்து பருகியதால் விஷம் முறிந்தது. சேவகர்கள் வியந்தனர். பிள்ளை அவர்கள் தாகத்தால் தண்ணீர் கேட்டார். குப்பைக் கிடங்கில் புழுக்கள் நெளியும் நீரைத் தந்தனர். அதையும் அவர் ஏற்று குடிக்க முயலும் போது அவரை உதைத்தனர். அவர் பரிதவித்து அருகில் இருந்த பாறை மீது விழுந்தபோது, கை முட்டி இடித்து அப்பாறை உடைந்து நீரூற்று தோன்றியது. இதைக் கண்ட சேவகர்கள் அதிசயித்தனர். இந்தப் பாறை இப்பொழுதும், “முட்டி இடிச்சான் பாறை” என்றே அறியப்படுகிறது.

பிள்ளையவர்களுக்கு இழைத்த கொடுமை இம்மட்டுமின்றி, இரணியலில் அவர் மீது கடுக்கக் காய்ச்சிய எண்ணெய்யை ஊற்றினர். அது பன்னீர் போலானது. குழித்துறையிலுள்ள சுண்ணாம்புக் காளவாயிலில் வைத்தனர். இறையருளால் அது அவரை ஒன்றும் செய்யவில்லை.

“இயேசுநாதர் திருவசனம் தவிர, எரிநரகப் பேய்களை கையில் எடுக்க மாட்டேன்” என்றார். சினமுற்றோர், பிள்ளையவர்களை ஆரல்வாய்மொழி காற்றாடி மலையில் கொலைபாதகம் செய்யத் துணிந்தனர். கைகள் கட்டப்பட்ட நிலையில் செபம் செய்தார் தேவசகாயம் பிள்ளை. வீரர்கள் துப்பாக்கியால் சுட, அது அவரை ஒன்றும் செய்யவில்லை. உடனே, வீரர்களுடைய துப்பாக்கியைப் பிள்ளையவர்கள் வாங்கி ‘சிலுவை’ அடையாளமிட்டுத் தந்தார். அதன்பின்பே, துப்பாக்கிக் குண்டுகள் அவர் உயிரைப் பறித்தன என்பர்.

**இன்றைய வாழ்வில்:**

நம்முடைய பிணிகளைத் தாங்கியவர், நம் துன்பங்களைச் சுமந்தவர், நம் குற்றங்களுக்ககக் காயமடைந்தவர், நம் தீச்செயலுக்காக நொறுக்கப்பட்டவர், "தந்தையே! உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்கிறார். இயேசுவின் உயிர் பறிக்கப்படவில்லை. அவரால் ஒப்படைக்கப்படுகிறது. அதுபோல, வேதசாட்சி தேவசகாயம் பிள்ளையின் உயிரையும் சேவகர்களால் பறிக்க முடியவில்லை. அவர் சிலுவை அடையாளம் வரைந்த துப்பாக்கிதான் அவர் உயிரைப் பெற்றது.

கிறிஸ்துவின் முடிவு - உயிர்ப்பைத் தந்தது. பிள்ளையவர்களின் முடிவு - உறுதியான விசுவாசத்தைத் தந்தது. நம் விசுவாசம் எங்கே நிற்கிறது? என்பதை நினைவு கொள்வோம்.

**இறை வேண்டலில்:**

"தசையினைத் தீச்சுடினும் சிவசக்தியைப் பாடும் நல் அகங் கேட்டேன்" - என்ற பாரதியைப் போல, தன்னுடலை வருத்திய போதும் இறையேசுவுக்காக மறைசாட்சியாக விளங்கினார் பிள்ளையவர்கள். அவரைப் போல நாங்களும் பிணிகளைத் தாங்கவும், துன்பங்களைச் சுமக்கவும், கிறிஸ்தவ விசுவாசத்தில் நிலைக்கவும் வரமருளும். ஆமென்.

## பதிமூன்றாம் நிலை மடியில் ஏற்றல்

**இறைமகன் வாழ்வில்:**

அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் துணிவுடன் பிலாத்திடம் போய் இயேசுவின் உடலைக் கேட்டார். இயேசு இறந்து விட்டதை நூற்றுவர் தலைவரிடம் கேட்டு அறிந்ததும், பிலாத்து இயேசுவின் உடலை யோசேப்பிடம் அளித்தான். (மாற்கு 15:43 - 45)

**இறையடியார் வாழ்வில்:**

கேரளாவில் சங்கனாச்சேரி மறைமாவட்டத்தில் பிறந்தவர் அன்னக்குட்டி.பிறந்த சில வாரங்களிலேயே தன் தாயை இழந்தார். பெரியம்மா, பாட்டி போன்றோர்களால் அன்னக்குட்டி வளர்க்கப்பட்டார். அவரின் இளமைப் பருவம் நெருங்க, பெரியம்மா அவருக்குத் திருமணம் செய்து வைக்கத் தனக்குப் பிடித்தமான ஒரு வரனுக்கு உறுதியளித்தார். அநேக புனிதர்களின் வாழ்க்கையைத் தன் பாட்டியிடம் கேட்டு வளர்ந்த அன்னக்குட்டிக்கு அத்தகு புனிதர்களின் வாழ்வில் ஆர்வமிருந்ததே தவிர, திருமணத்தில் நாட்டமில்லை. எனவே, அன்னக்குட்டி "திருமணம் வேண்டாம்" என மறுத்தார். பெரியம்மா பிடிவாதமாக இருந்தது மட்டுமின்றி, திருமணத்திற்குத் தேதியும் குறித்து நிச்சயித்தார்.

அன்னக்குட்டி இறைவனை மன்றாடி ஒரு முடிவுக்கு வந்தார். "தனக்கு அழகு இல்லையெனில் திருமணம் செய்ய யாரும் முன்வர மாட்டார்கள்" என எண்ணினார். அடுத்தநாள் அதிகாலையில், அறுவடையின் நெற்சாவிகளை எரித்து சாம்பல் சேர்க்கும் தீக்குழியில் தன் கால்களைப் புதைய வைத்தார். கால்கள் வெந்தன. திருமணம் தடைப்பட்டது. கால்புண் சுகம்பெற நீண்ட நாளானது. அதன்பின் தன் விருப்பப்படியே பரணஞ்ஞானம் கன்னியர் மடத்தில் சேர்ந்தார். இவரே, இன்று புனித அல்போன்சம்மாளாகப் போற்றப்படுகிறார்.

**இன்றைய வாழ்வில்:**

எல்லா தேசத்திலும் மரபுக்கு உட்படுபவர்கள் பெண்களே. இங்கு அன்னை மரியின் மடியில் இயேசு கிடத்தப் பட்டிருக்கிறார். மரபுத் தாயின் மடியில் உயிரிழந்த இயேசுவை நாம் பார்க்கிறோம். மரபுகளை உடைத்தவன் இப்போது மரபின் மடியில்! உயிரோடிருக்கும் போது மரபுக்கு உட்படாத இயேசு, தன்

ஆவியைத் துறந்தபின் மரபுக்கு உட்படுகிறார். அதுபோல, புனித அல்போன்சம்மாவும், கிறிஸ்துவின் அழைப்புப் பணியை ஏற்க தன் வாழ்நாளிலேயே மரபுகளை உடைத்தார்; இறைபணி ஏற்றார்.

மூட நம்பிக்கைகள், சாதி சமய சடங்குகள், தீண்டாமை, வர்க்கப் பாகுபாடு போன்றவற்றால் நாமும் "மனிதம்" என்பதைக் காக்க மறக்கிறோம். இந்த இழிநிலைக்கு நம் மரபு என்னும் கட்டுக்களே காரணம். இயேசு இதைத் தகர்த்தார். மனிதமே புனிதமெனக் கண்டார்.

**இறை வேண்டலில்:**

அன்பின் இறைவா, உம்மைப் போல, அல்போன்சம்மாவைப் போல நாங்களும் மரபுகளைக் கடந்து மனிதத்தைக் காக்கும் மனஏற்றத்தைத் பெற்றிட வேண்டுகிறோம். ஆமென்.

## பதினான்காம் நிலை அடக்கம் செய்தல்

**இறைமகன் வாழ்வில்:**

"யோசேப்பு மெல்லிய துணி ஒன்றை வாங்கி வந்து, இயேசுவின் உடலை இறக்கித் துணியால் சுற்றிப் பாறையில் வெட்டப்பட்டிருந்த கல்லறையில் கொண்டு வைத்தார். அதன் வாயிலில் ஒரு கல்லை உருட்டி வைத்தார்." (மாற்கு 15:46)

**இறையடியார் வாழ்வில்:**

ஸ்பெயின் தேசத்தில் ஓர் உயர் குடும்பத்தில் பிறந்தவர் பிரான்சிஸ் சேவியர். பாரீசு நகரில் மாணவப் பருவத்திலேயே ஆன்மிகப் பயிற்சியை மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் கொடுத்தவர். இன்னாசியாரின் முயற்சியாலும், மேற்பார்வையாலும் பிரான்சிஸ் சேவியரின் துறவு வாழ்க்கை தொடங்கியது. போர்ச்சுக்கல், இந்தியா, மலாக்கியா, ஜப்பான், சான்சியன் தீவு என்று பல நாடுகளில் பணியாற்றிய இவர், 1552 - ம் ஆண்டு விண்ணகம் சேர்ந்தார். இந்தியாவில் கோவா மக்களின் வற்புறுத்தலினால் பிரான்சிஸ் சேவியரின் உடல் அங்குள்ள ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது. பதினான்காம் நூற்றாண்டிலிருந்து அவரது உடல் இன்னும் அழுகாமல் இருப்பது புதுமையே என்று மருத்துவ அறிக்கை தெரிவிக்கிறது.

அதே போல் தந்தை வின்சென்ட் தே பால் 1660 -ல் இறந்தபின், அவர் உடல் முழுவதும் அழிந்து விட்டது. ஆனால் அவருடைய அன்பு நிறை இதயம் மட்டும் இன்று வரை அழியாமல் இருக்கிறது. அதனைப் பாரீசு நகரிலுள்ள ஓர் ஆலயத்தில் மக்கள் பார்வைக்காகவும், வணக்கத்திற்காகவும் இன்றும் வைக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வாழ்வில்:**

மனிதன் கடவுளே மறக்காமலிருக்க, அவ்வப்போது ஏதாவதொரு இயற்கை மீறிய செயலால் கடவுள் நினைவுபடுத்துவார். அதற்குச் சான்றே சவேரியாரின் உடலும், வின்செண்ட் தே பாலின் இதயமும். இவ்வாறு வெளிப்படுத்திய இறைவன், "தன்னை இவ்வுலகிற்கு வெளிபடுத்திய உன்னத நிலையே உயிர்ப்பு!" இந்த உயிர்ப்பிற்கு அடித்தளம் தான் - இந்த அடக்கம். இது மனிதப் பிறவியின் முடிவைக் காட்டுகிறது. "மனிதனே, மண்ணிலிருந்து வந்தாய், மண்ணிற்கே திரும்புவாய்" என்ற தத்துவத்தின் நிறைவு.

இங்கு "நான், நாம், நாங்கள்" என்பதெல்லாம் வெறுமை. ஏனெனில் இவ்வுலகில் நாம் உலவிய இடம், நம் இறப்பிற்குப் பின் வெற்றிடமாகிறது. அடங்காமல் போனவர்களும் அடங்கிப்போவது இந்த அடக்கத்தில்தான்! இதற்குள் ஏன் இத்தனை வஞ்சம், பழி, வீண்புகழ், சுயநலம், பிடிவாதம், சந்தேகப் போர்? இவை அனைத்தையும் வாழும்போது புதைத்தால், இம்மண்ணக வாழ்வே விண்ணக வாழ்வாகும் என்பது உறுதி.

**இறை வேண்டலில்:**

இறைவா, நாங்கள் நிலையற்ற தன்மையின் அடையாளமாய் உள்ளோம். கிறிஸ்துவைப் போல நிலையான தன்மை பெறவும், இம்மண்ணக வாழ்வை, விண்ணக வாழ்வாக மாற்றவும் அருள் தாரும். ஆமென்.

**நிறைவில்:**

"புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை, விதைக்கப்படுகிறார்கள்." கிறிஸ்து என்னும் விதை பலகோடி மக்களை கிறிஸ்தவத்தில் வளரச் செய்திருக்கிறது. இன்று கிறிஸ்தவம் உலக விருட்சமாய் செழித்திருக்கிறது.

"கிறிஸ்தவம்" மதமல்ல, மானுடப் பண்பு! அன்பே கடவுள், உன்னை அன்பு செய்வது போல உன் அயலானை அன்பு செய், எளிய மனத்தோர் பேறுபெற்றோர், ஏழைகளுக்கு உதவு, தாய் தந்தையைப் போற்று, மன்னியுங்கள் மன்னிக்கப்படுவீர்கள் - இதைத்தான் கிறிஸ்தவம் போதிக்கிறது. எனவேதான், கிறிஸ்தவம் இன்று நற்பண்புகளின் மடமாக, எல்லோரையும் நல்லோராக்கும் கல்விக் கூடமாகத் திகழ்கிறது.

கிறிஸ்தவன் என்பது விவிலியத்தைத் தூக்கிக் கொண்டு வீதியில் நடப்பதும், பகட்டாக வாழ்வதும், விதவிதமாக விழாக்களைக் கொண்டடுவதிலும் அல்ல; இறைவார்த்தையை வாழ்ந்து காட்டி, வழியில் வாடுபவர்களையும் வாழ வைப்பதே! இதையே இன்றைய சிலுவைப் பாதை நமக்கு மூன்று நிலைகளில் சிந்திக்க வைத்திருக்கிறது. இதனின்று நாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டியவை இரண்டு மட்டுமே.

ஒன்று, தனிமனித சிந்தனை, சொல், செயலில் மாற்றத்தை ஏற்பது. அதாவது, ஐம்புலநாட்டம், கோபம், ஆசை, பொறாமை, சந்தேகம், பிடிவாதம், வீண்பெருமை, வஞ்சம் போன்ற வன்குணங்களை முற்றிலும் விட்டுவிட்டு; தாழ்ச்சி, பொறுமை, சாந்தம், மன்னிப்பு, ஒப்புரவு, சமாதனம், அன்பு ஆகியவற்றை எப்போதும் ஏற்று வாழ்தல்.

இரண்டு, கிறிஸ்து அளித்த நல்வாழ்வால் ஏழை எளியோர் பிணியுற்றோருக்குக் கருணை, பரிவு, இரக்கம் கொண்டு நாளும் உதவுதல். இப்படிப்பட்ட வாழ்க்கையையே கிறிஸ்துவும், கிறிஸ்துவைப் பின்பற்றி வாழ்ந்த அடியார்களும் வாழ்ந்திருக்கிறார்கள்.

அன்னை தெரசா அவர்கள், தன்னை இறைவனுக்கு உகந்த பிள்ளையாக மாற்றிக் கொண்டு, இந்தச் சமுதாயத்தில் எளியோருக்கும், பிணியுற்றோருக்கும், ஆதரவற்றோருக்கும் அடைக்கலமாக வாழ்ந்தார்.

"செபிக்கும் உதடுகளை விட உதவும் கரங்களே சிறந்தன" என்று கூறிய அவர் நம் சமகாலத்தில் வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

*அவர் வாழ்ந்த வாழ்க்கை - கிறிஸ்தவ வாழ்க்கை அவரது அன்புப் பணி - மாபெரும் நற்செய்திப் பணி*
*அவர் செய்த தியாகம் - கிறிஸ்துவுக்கான ஊழியம்*

இந்தப் பண்புகளை நாமும் நம் வாழ்க்கையில் பின்பற்றி வாழ முயல்வோம். முதலில், அதற்கு இடையூறாக உள்ள நம் பாவங்களை இனி செய்வதில்லை என உறுதி ஏற்போம். இரக்கத்தின் தேவன் பாவிகளாகிய நம் மீது மனமிரங்கி மன்னிக்கக் காத்திருக்கிறார். "நான் பாவம் செய்தேன்; உம்மை நோகச் செய்தேன்; என்னை மன்னியும் தேவனே" என்று நம் ஒவ்வொருவரும் கரங்களைக் குவித்து, கண்களை மூடி, மன்னிப்பின் தேவனை மனதில் நிறைத்து, அவரை நோக்கி வேண்டுவோம்."கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்ற தேவன் நம்முடைய குரலைக் கேட்டிருக்கிறார். நம் தேவைகளை இப்போது கொடுத்திருக்கிறார்.அவருக்கு நன்றி கூறி செபிப்போம்.

அன்பின் இறைவா, உம்முடைய சிலுவைப்பாடுகளின் வழியாக, உம்மையும், உம்முடைய அடியார்களைக் குறித்தும், தியானித்து இருக்கிறோம். இத்தியான சிந்தனை வெறும் சம்பிரதாயமாக இல்லாமல், இதன் வழியாக எங்கள் வாழ்க்கையில் மாற்றத்தைத் தந்திருக்கிறீர். அதற்காக உமக்கு நன்றி சுவாமி. இன்று முதல், எம் வாழ்க்கையைப் பறைசாற்றும் நற்செய்தியாக நாங்கள் வாழ்ந்து காட்ட உறுதியளிக்கிறோம். பிசாசுகளின் தீவினைகள் துளியும் எங்களை அணுகாமல், கிழக்குக்கும் மேற்குக்கும் உள்ள தூரமளவு விலக்கிக் காத்தருளும், ஆசிர்வதியும். ஆமென்.